Frühförderung
**Stadt Bern**



# வீட்டுவருகைத் திட்டம்
# schritt:weise

1-3 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுடன் வீட்டில் விளையாடிக் கற்றுக்கொள்தல்

primano
für einen guten Start

**வேறு மொழிகளிலான துண்டுப் பிரசுரங்களை நீங்கள் இங்கே காணலாம்:**

Deutsch (டொச்)
English (ஆங்கிலம்)
Shqip (அல்பானிஸ்)
عربي (அராபிக்)
Français (பிரென்ச்)
Soomaali (சோமாலி)
Español (ஸ்பானிஸ்)
Türkçe (துருக்கி)
ትግሪኛ (ரிக்கிறீனிஸ்)
Русский (றைசியன்)
Українська (உக்கிரையின்)
Kurdî (குருதிஸ்)



## இத்திட்டம் குடும்பத்திற்கு என்ன செய்கின்றது?

- பிள்ளை விளையாடும்போது மொழி, செயற்திறன் மற்றும் சமூக நலன்களை பிறருடன் சேர்ந்து கற்றுக்கொள்கின்றது.
- பிள்ளைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உறவு வலுவடைகின்றது.
- பிள்ளை சம்பந்தமான அனைத்து விடயங்களிலும் பெற்றோருக்கு உதவி வழங்கப்படும் (உ- ம். விளையாட்டுக்குழு / பாலர்பாடசாலை).
- பிள்ளை பல புதிய அனுபவங்களைப் பெறுவதுடன் அர்த்தமுள்ள விளையாட்டுப்பொருளைப் பெற்றுக்கொண்டு அதை சொந்தமாக்கிக் கொள்ளலாம்.
- பிள்ளை மற்றும் பெற்றோர் தமது தன்னம்பிக்கையைப் பலப்படுத்துகின்றனர்.
- குடும்பங்கள் தங்கள் பகுதியிலுள்ள வேறு குடும்பங்களை, சலுகைகளை மற்றும் சந்திக்கும் இடங்களை அறிந்து கொள்கின்றனர்.
- முழுக் குடும்பத்திற்கும் விளையாட்டு மற்றும் மகிழ்வைக் கொடுக்கின்றது.
- இவை அனைத்தும் பாலர்வகுப்பு மற்றும் பாடசாலைக்கான ஒரு நல்ல ஆரம்பத்துக்கு வழிவகுக்கின்றது.

## இத்திட்டம் எவ்வாறு செயற்படுகின்றது?

- வாரத்தில் ஒருமுறை ஒரு வீட்டுவருகையாளர் குடும்பத்தினரைச் சந்திக்க உங்கள் வீட்டுக்கு வருகை தருவார்.
- ஒரு வீட்டுவருகையாளர் ஒரு புதிய விளையாட்டு யோசனை, ஒரு படப் புத்தகம் அல்லது ஒரு விளையாட்டை தன்னுடன் கொண்டு வருவார்.
- இரு வாரத்துக்கு ஒருமுறை இதில் பங்கேற்கும் குடும்பங்கள் ஒரு குழுச் சந்திப்பை மேற்கொள்வார்கள்.
- குழுச்சந்திப்பு: அனுபவங்களைப் பகிர்தல், குறிப்பாகப் பிள்ளைகளின் ஆரோக்கியம், விளையாட்டு, பொருத்துதல் மற்றும் குழுவாகப் பாடுதல், உல்லாசப் பயணம். போன்ற அனைத்து விடயங்கள் குறித்த நிபுணர்களின் தகவல்கள்.

## காட்சிப்படம்

உங்கள் பார்வைக்கு, வீட்டுவருகைத் திட்டம் schritt:weise குறித்த எமது காட்சிப்படத்தை நீங்கள் பாருங்கள்.

## நான் எவ்வாறு பங்கேற்கலாம்?

- எந்த வேளையிலும் பதிவை மேற்கொள்ளலாம்.
- காலம்: 18 மாதங்கள்
- வருடாந்த ஆரம்பம் பங்குனியில்
- இத்திட்டம் பல வித்தியாசமான மொழிகளில் வழங்கப்படுகின்றது.
- கட்டணம் மாதாந்தம் 10 பிராங்குகள், குறைப்பதற்கு இயலும்.





Gesundheitsdienst der
Stadt Bern
Frühförderung primano
Monbijoustrasse 11
3011 Bern

031 321 41 60
primano@bern.ch

**primano.ch**